**செப்டம்பர் – 27**

# TNPSC துளிகள்

- 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ராஜஸ்தானின் பொக்ரானில் இந்தியாவின் முதல் உள்நாட்டு நீண்ட தூர ஒரு வழித் தாக்குதல் (OWA) ஆளில்லா விமானமான KAL வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.
    - OWA ஆளில்லா விமானம் என்பது ஒரு வழி ஆளில்லா விமானமாகும், இது ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைந்து, ஏவப்பட்ட இடத்திற்குத் திரும்பாமல் அதைத் தாக்க வடிவமைக்கப்பட்டுள்ளது.
- சீனாவின் ஷாங்காயில் நடைபெறும் 48வது உலகத் திறன் போட்டியில் பங்கேற்பதற்காக இதுவரை இல்லாத அளவில் 70 திறமையான போட்டியாளர்கள் அடங்கிய மிகப்பெரிய குழுவை இந்தியா அனுப்பியுள்ளது.
    - இந்தியாவின் உலகளாவிய திறன் தரவரிசையானது 2015 ஆம் ஆண்டில் 29வது இடத்திலிருந்து 2024 ஆம் ஆண்டில் 13வது இடத்திற்கு முன்னேறியுள்ளது, மேலும் 2025 ஆம் ஆண்டு உலகத் திறன் ஆசியா போட்டியில் இந்தியா 8வது இடத்தையும் பிடித்தது.
- ஜப்பானின் நகோயாவில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஸ்கீட் துப்பாக்கிச் சுடுதல் கலப்பு அணிகள் பிரிவில் இந்தியா தனது முதல் பதக்கத்தை வென்றது.
    - கலப்பு அணிகளுக்கான ஸ்கீட் பிரிவில் அனந்த்ஜீத் சிங் நருகா மற்றும் பரிநாஸ் தலிவால் ஆகியோர் வெண்கலப் பதக்கம் வென்றனர்.
- நீர் பாதுகாப்பு, பருவநிலையைத் தாங்கும் நீர் மேலாண்மை, கொள்கை உரையாடல், தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பு ஆகியவற்றை மையமாகக் கொண்டு 9வது இந்திய சர்வதேச நீர் வாரம் (IIWW) 2026 புது தில்லியிலுள்ள பாரத் மண்டபத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.
    - 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 22 முதல் 26 வரை ஜல் சக்தி அமைச்சகத்தால் “Climate Resilient Water Management” என்ற கருத்துருவுடன் IIWW 2026 ஏற்பாடு செய்யப் பட்டு உள்ளது.
- புற்றுநோயாளிகளுக்கு நம்பிக்கை, கவனிப்பு மற்றும் ஊக்கத்தை அளித்து ஆதரவு அளிப்பதற்காக 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 22 அன்று உலக ரோஜா தினம் அனுசரிக்கப் படுகிறது.
    - உலக ரோஜா தினமானது இந்த தினத்தை அனுசரிக்கத் தூண்டுகோலாக அமைந்த இளம் கனேடிய புற்றுநோயாளியான மெலிண்டா ரோஸினுடன் தொடர்புடையது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## போதை பொருளற்ற மறுவாழ்வுத் திட்டம் - PAYANAM

- சென்னையில் உள்ள புழல் மத்திய சிறை-II-இல் பயணம் (PAYANAM) என்ற சோதனை போதைப் பொருளற்ற மறுவாழ்வு மற்றும் மீட்சித் திட்டம் தொடங்கப்பட்டது.
- PAYANAM என்பது Positive Awareness Yielding Against Narcotics Addiction Movement என்பதன் சுருக்கமாகும்.
- ஆலோசனை, உளவியல் ஆதரவு, சிகிச்சைத் தலையீடுகள் மற்றும் வாழ்க்கைத் திறன் பயிற்சி ஆகியவற்றின் மூலம் போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு ஆதரவளிப்பதை

இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது சிறைவாசிகளின் நடத்தை மாற்றம், மறுவாழ்வு மற்றும் சமூக மறு ஒருங்கிணைப்பு ஆகியவற்றிலும் கவனம் செலுத்துகிறது.
- பயணம் திட்டமானது சிறைக்காவலைத் தாண்டி சிகிச்சை, சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்வு ஆகியவற்றை நோக்கிய சீர்திருத்த சேவைகளை விரிவுபடுத்துவதற்கான ஒரு சோதனைத் திட்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.




## தேசியச் செய்திகள்

### 2030 ஆம் ஆண்டிற்குள் ஹெபடைடிஸ் ஒழிப்பு




- நியூயார்க்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் ஒரு நிகழ்வில் 2030 ஆம் ஆண்டிற்குள் பொது சுகாதார அச்சுறுத்தல்களாக உள்ள ஹெபடைடிஸ் பி மற்றும்

சி ஆகியவற்றை ஒழிப்பதற்கான தனது உறுதிப்பாட்டை இந்தியா மீண்டும் வலியுறுத்தியது.

- ❖ வைரஸ் ஹெபடைடிஸைத் தடுப்பது, பரிசோதிப்பது, கண்டறிவது, சிகிச்சை அளிப்பது மற்றும் பராமரிப்பது ஆகியவற்றை இந்தியா வலுப்படுத்தி வருகிறது.
- ❖ ஹெபடைடிஸ் பி நோய்த்தடுப்பு, பிரசவத்திற்கு முந்தைய பரிசோதனை, இலவச நோயறிதல் மற்றும் சிகிச்சை மற்றும் பாதுகாப்பான இரத்தமாற்ற சேவைகள் ஆகியவை இந்த நடவடிக்கைகளில் அடங்கும்.
- ❖ ஊசி மூலம் போதைப்பொருள் பயன்படுத்துபவர்களுக்கு ஆலோசனை மற்றும் மறுவாழ்வு ஆதரவு வழங்கப்படுகிறது.
- ❖ 2030 ஆம் ஆண்டு இலக்கை அடைவதற்கு உலகளாவிய ஒத்துழைப்பு மற்றும் தடுப்பு, பரிசோதனை மற்றும் சிகிச்சைக்கான சமமான அணுகல் ஆகியவற்றை இந்தியா வலியுறுத்தியது.

## இந்தியாவில் தொலைத்தொடர்பு பாதுகாப்பு




- ❖ 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இந்தியாவின் செயலில் உள்ள வயர்லெஸ் மொபைல் சந்தாதாரர்களின் எண்ணிக்கை 1,204.01 மில்லியனை எட்டியது, இது மொபைல் சாதனங்கள் மற்றும் சர்வதேச மொபைல் உபகரண அடையாள (IMEI) எண்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டுகிறது.
- ❖ IMEI என்பது தொலைத்தொடர்பு வலையமைப்பில் அலைபேசி சாதனத்தை அடையாளப் படுத்தும் 15 இலக்க தனித்துவ எண்ணாகும் என்பதோடு இதன் முதல் 8 இலக்கங்கள் வகை ஒதுக்கீட்டுக் குறியீட்டை (TAC) உருவாக்குகின்றன.
- ❖ TAC ஒதுக்கீட்டை அலைபேசி தகவல் தொடர்புக்கான உலகளாவிய அமைப்புச் சங்கம் (GSMA) மேற்பார்வையிடுகிறது, அதே வேளையில் உற்பத்தியாளர்கள் சாதனங்களுக்கு தனித்துவமான IMEI எண்களை ஒதுக்குகிறார்கள்.
- ❖ தொலைத்தொடர்புச் சட்டம் 2023-இன் கீழ் IMEI எண்ணை மாற்றுவது மற்றும் மோசடி அல்லது ஆள்மாறாட்டம் மூலம் சிம் கார்டுகளைப் பெறுவது தடைசெய்யப்பட்டுள்ளது, மேலும் இதற்கு 3 ஆண்டுகள் வரை சிறை தண்டனை, ₹50 லட்சம் அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

- சஞ்சார் சாதி (Sanchar Saathi) தளமானது சாதன விவரங்களைச் சரிபார்க்கவும் காணாமல் போன அல்லது திருடப்பட்ட அலைபேசிகளை முடக்கவும் பயனர்களுக்கு உதவுகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## V4+இந்தியா வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டம்

- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை (UNGA) கூட்டத்தொடரின் ஒரு பகுதியாக நியூயார்க்கில் முதல் V4+இந்தியா வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டம் நடைபெற்றது.
- விசெக்ராட் குழுவை (V4) உருவாக்கும் போலந்து, ஹங்கேரி, ஸ்லோவாக்கியா மற்றும் செக் குடியரசு ஆகிய நாடுகளுடன் இந்தியாவை இக்கூட்டம் ஒன்றிணைத்தது.
- V4 அமைப்பின் ஸ்லோவாக்கிய தலைமையின் கீழ் நடைபெற்ற இக்கூட்டத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் பங்கேற்றார்.
- வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம், கண்டுபிடிப்புகள், பாதுகாப்பு, பாதுகாப்புத் துறை, இணைப்பு, கல்வி மற்றும் போக்குவரத்து ஆகியவை குறித்து இதில் விவாதிக்கப் பட்டது.
- V4+இந்தியா வடிவமைப்பானது இந்தியா மற்றும் விசெக்ராட் குழுவிற்கும் இடையிலான உரையாடல் மற்றும் ஒத்துழைப்புக்கான கூடுதல் தளத்தை வழங்குகிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## உயிரி அடிப்படையிலான PLA நெகிழிகள் உற்பத்தி

- BioE3 (பொருளாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் வேலைவாய்ப்பிற்கான உயிரி தொழில் நுட்பம்) கொள்கையின் கீழ் உயிரி அடிப்படையிலான மக்கும் பாலி லாக்டிக் அமில

(PLA) நெகிழிகளின் வணிகப் பயன்பாட்டு மாற்றம் மற்றும் சோதனை அளவிலான உற்பத்தியை இந்தியா தொடங்கியுள்ளது.

❖ கரும்பு வெல்லப்பாகு மற்றும் சக்கை போன்ற வேளாண் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உத்தரப் பிரதேசத்தின் கும்ப்ஹியில் ஆண்டுக்கு 100 டன் (TPA) உற்பத்தி செய்யும் சோதனை ஆலை நிறுவப்பட்டு வருகிறது.

❖ PLA என்பது கரும்பு, மக்காச்சோளம் மற்றும் மரவள்ளிக்கிழங்கு போன்ற நொதிக்கப் பட்ட தாவரப் பொருட்களிலிருந்து தயாரிக்கப்படும் ஒரு உயிரி அடிப்படையிலான வெப்பத்தால் இளகும் நெகிழி ஆகும்.

❖ PLA நெகிழியை தொழில்துறை ரீதியாக உரமாக மாற்ற முடியும், மேலும் பொருத்தமான சூழ்நிலைகளில் இது நீர், கார்பன் டை ஆக்சைடு மற்றும் கரிமப் பொருட்களாகச் சிதைவடைகிறது.

❖ இது பெட்ரோலியம் சார்ந்த நெகிழிகளைச் சார்ந்திருப்பதைக் குறைத்து விவசாயக் கழிவுகளைப் பயனுள்ள பொருட்களாக மாற்றும்.

❖ மக்கும் பேக்கேஜிங்/பொதியிடல், விவசாயப் படலங்கள் மற்றும் நுகர்வோர் பொருட்களில் PLA பயன்படுத்தப்படலாம்.




## வேகமாக சுருங்கும் இரும விண்மீன் - eRASSU J0608




❖ இந்திய தலைமையிலான வானியலாளர்கள் eRASSU J060839.5–704014 (eRASSU J0608) என்ற ஒன்றை ஒன்று சுமார் 6.2 நிமிடங்களில் சுற்றி வரும் ஒரு ஜோடி வெள்ளை குறுமீன்களை அடையாளம் கண்டுள்ளனர்.

- இது ஒரு மிகச்சிறிய இரட்டை வெள்ளை குறுமீன் இரும அமைப்பாகும், இதன் சுற்றுப்பாதை வினாடிக்கு 4.7 × $10^{-11}$ வினாடிகள் என்ற அளவில் சுருங்கி வருகிறது.
- வெள்ளை குறுமீன்கள் என்பவை சூரியனைப் போன்ற விண்மீன்கள் தங்களது அணுக்கரு எரிபொருளைப் பயன்படுத்தி முடித்து தங்களது வெளி அடுக்குகளை இழந்த பிறகு உருவாகும் அடர்த்தியான எச்சங்களாகும்.
- ஒரு வெள்ளை குறுமீனிலிருந்து வரும் பொருளானது நேரடித் தாக்கத்தின் மூலம் மற்றொன்றை நேரடியாகத் தாக்கலாம், இது வலுவான எக்ஸ்-கதிர் உமிழ்வை உருவாக்குகிறது.
- நாசாவின் NICER, ஐன்ஸ்டீன் ப்ரோப் மற்றும் ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின் (ESA) XMM-நியூட்டன் ஆய்வகங்கள் சுமார் 3.5 ஆண்டுகள் இந்த அமைப்பை ஆய்வு செய்யப் பயன்படுத்தப் பட்டன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## தமிழ்நாடு பனை விதை இயக்கம் 2026

- நீர்நிலைகளின் கரைகளை வலுப்படுத்தவும் மண் அரிப்பைத் தடுக்கவும் மாநிலம் முழுவதும் ஒரு கோடி பனை விதைகளை நடும் இயக்கத்தை தமிழ்நாடு தொடங்கியது.
- காஞ்சிபுரம் மாவட்டம் தேவரிம்பாக்கம் கிராமத்தில் இந்த இயக்கத்தை ஊரக வளர்ச்சி - பஞ்சாயத்து ராஜ் மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.
- நிலத்தடி நீர் செறிவூட்டல், மண் பாதுகாப்பு மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பனை பொருட்களின் உற்பத்தியை ஆதரிப்பதை இந்த முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பனை மரங்கள் ஆழமான மற்றும் வலுவான வேர்களைக் கொண்டுள்ளன, அவை மண்ணைப் பிடித்துக் கொள்கின்றன, மண் அரிப்பைக் குறைக்கின்றன, நீர் ஊடுருவலை மேம்படுத்துகின்றன மற்றும் நிலத்தடி நீரைப் பாதுகாக்க உதவுகின்றன.
- அவை வறட்சியைத் தாங்கக்கூடியவை மற்றும் குறைந்த நீருடன் வறண்ட பகுதிகளில் நன்றாக வளரக்கூடியவை.




# விளையாட்டுச் செய்திகள்

## ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 2026 தொடக்க விழா

- 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 19 அன்று ஜப்பானின் நகோயாவில் உள்ள மிசுஹோ

பார்க் தடகள மைதானத்தில் 2026 ஆசிய விளையாட்டுப் போட்டிகள் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கின.

- ஜப்பான் பேரரசர் நருஹிட்டோ இந்த விளையாட்டுப் போட்டிகளை முறையாகத் தொடங்கி வைத்தார்.
- தொடக்க விழாவானது "ஹார்மோனிக் ஹார்ட் பீட்" என்ற கருத்துடன் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டின் கருத்துருவை முன்னிலைப்படுத்தியது.
- நாடுகளின் அணிவகுப்பின் போது பவன் செராவத் மற்றும் மனு பாக்கர் ஆகியோர் இந்தியக் குழுவை வழிநடத்தினர்.
- இதய வடிவிலான தீபத்தை ஷிகெனோபு முரோஃபுஷி தனது மகன் கோஜி முரோஃபுஷியுடன் இணைந்து ஏற்றினார்.




# முக்கிய தினங்கள்

## உலக மருந்தாளுநர் தினம் 2026 - செப்டம்பர் 25




- சுகாதாரம் மற்றும் பாதுகாப்பான மருந்து பயன்பாட்டில் மருந்தாளுநர்களின் பங்கை அங்கீகரிப்பதை இந்த தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நுண்ணுயிர் எதிர்ப்புச் சக்தி (AMR) விழிப்புணர்வு மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் பொறுப்பான பயன்பாடு ஆகியவை 2026 ஆம் ஆண்டின் முக்கிய கவனம் செலுத்தும் பகுதிகளாகும்.
- இந்தியாவில் இந்திய மருந்தகக் சபை (PCI) "ஸ்வஸ்த் பாரத்: நுண்ணுயிர் எதிர்ப்புச் சக்தியை (AMR) எதிர்த்துப் போராடுதல்" என்ற நோக்கத்துடன் இந்த தினத்தை அனுசரிக்கிறது.

- இந்தியாவில் மருந்தியல் கல்வி மற்றும் தொழில்முறை தரங்களை ஒழுங்குபடுத்துவதற்காக 1948 ஆம் ஆண்டு மருந்தகச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பு PCI ஆகும்.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Empowering pharmacists for healthier futures" என்பதாகும்.

## உலக நுரையீரல் தினம் 2026 - செப்டம்பர் 25

- நுரையீரல் ஆரோக்கியம் மற்றும் சுவாச நோய்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆஸ்துமா, நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் (COPD), நுரையீரல் புற்றுநோய், காசநோய் (TB) மற்றும் சுவாசத் தொற்றுகள் ஆகியவை நுரையீரல் தொடர்பான முக்கிய நோய்களாகும்.
- 2016 ஆம் ஆண்டு கியோட்டோவில் நடைபெற்ற FIRS சபைக் கூட்டத்தின் போது சர்வதேச சுவாசச் சங்கங்களின் மன்றம் (FIRS) உலக நுரையீரல் தினம் என்ற யோசனையை உருவாக்கியது.
- நுரையீரல் நோய்கள் புகைப்பிடித்தல், காற்று மாசடைதல், பிறர் வெளியிடும் புகையைச் சுவாசித்தல் மற்றும் தீங்கு விளைவிக்கும் சுற்றுச்சூழல் வெளிப்பாடு போன்ற முக்கிய ஆபத்து காரணிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் "வாழ்நாள் முழுவதும் நுரையீரல் ஆரோக்கியம்" என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★